Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNUSRB Police Constable

## Previous Year Paper

### Tamil Language

### 27 Nov, 2022

Teachingninja.in

C

## பகுதி – II
## தமிழ் மொழி தகுதித் தேர்வு

71. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது எது ?

(A) வாய் + தீயின்
(B) வாய்த்து + ஈயின்
(C) வாய்த்து + தீயின்
(D) வாய் + ஈயின்

72. பொருத்துக.

I. சுருங்கிய பழம் — a. ஒல்லிக்காய்
II. சூட்டினால் பழுத்த பிஞ்சு — b. சிவியல்
III. குளுகுளுத்த பழம் — c. வெம்பல்
IV. தென்னையில் கெட்ட காய் — d. அளியல்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | c | d | a |
| (B) | b | d | a | c |
| (C) | b | a | c | d |
| (D) | b | d | c | a |

(12) அ

73. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொல் எது ?

(A) சரி (B) குருவி (C) கிளி (D) ஆம்

74. பொருத்துக.

I. கோட்டி — a. போர்
II. பொலம் — b. மழை
III. வசி — c. பொன்
IV. கலாம் — d. மன்றம்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | b | d | c | a |
| (C) | a | b | c | d |
| (D) | c | d | a | b |



Teachingninja.in

75. சாகித்திய அகாடெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் யார் ?

(A) ராஜம் கிருஷ்ணன்

(B) எம். எஸ். சுப்புலட்சுமி

(C) பால சரஸ்வதி

(D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

76. கீழ்க்காண்பனவற்றுள் காதில் அணியும் அணிகலன் எது ?

(A) குழை

(B) சுட்டி

(C) சிலம்பு

(D) கிண்கிணி

77. வாக்கியம் I : தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.

வாக்கியம் II : எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை களைந்தவர் வீரமாமுனிவர்

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

78. வாக்கியம் I : 'மதுரை செல்லும் வழி யாது ?' என்ற வினாவிற்கு இப்பக்கமாகச் செல்ல வேண்டும் என்று கூறுவது 'சுட்டு விடை' ஆகும்.

வாக்கியம் II : 'கடைக்குப் போவாயா ?' என்ற வினாவிற்குப் போக மாட்டேன் என மறுத்துக் கூறுதல் 'மறைவிடை' ஆகும்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

79. தவறான இணையை கண்டறிக.

| | |
|---|---|
| I. எஸ். இராமகிருஷ்ணன் | a. கால் முளைத்த கதைகள் |
| II. தாராபாரதி | b. இது எங்கள் கிழக்கு |
| III. கவிமணி தேசிய விநாயகனார் | c. ஆசிய ஜோதி |
| IV. தாயுமானவர் பாடல்கள் | d. புதிய விடியல்கள் |

(A) தாராபாரதி – இது எங்கள் கிழக்கு

(B) எஸ். இராமகிருஷ்ணன் – கால் முளைத்த கதைகள்

(C) கவிமணி தேசிக விநாயகனார் – ஆசிய ஜோதி

(D) தாயுமானவர் பாடல்கள் – புதிய விடியல்கள்

Teachingninja.in

80. வாக்கியம் I : தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது தமிழர் மரபு.

வாக்கியம் II : வாழை இலையில் மருத்துவப் பயன்கள் உள்ளன.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

81. "முதற்கருவி" என்ற பெயரில் அழைக்கப்படும் இசைக்கருவி எது ?

(A) மத்தளம்

(B) சங்கு

(C) கொம்பு

(D) பறை

82. கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டு கட்டப்பட்ட அணை

(A) தௌலீஸ்வரம்

(B) கிருஷ்ணராஜசாகர்

(C) ஹீராகுட்

(D) பவானி சாகர்

83. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர்

(A) எழுது

(B) பாடு

(C) படித்தல்

(D) நடி

84. வாக்கியம் I : இத்தாலி நாட்டைச் சேர்ந்த கடற்பயணி மார்க்கோபோலோ ஆவார்.

வாக்கியம் II : முந்நீர் வழக்கம் என்று கடல் பயணத்தைக் குறிப்பிடும் நூல் – அகநானூறு.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

85. புகழ் கொண்ட குறளொடு அகம்புறமும் – செம்
பொருள் கண்ட தமிழ்ச்சங்கம் ...
– என்ற இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(A) பாரதியார்

(B) உடுமலை நாராயணகவி

(C) பாரதிதாசன்

(D) செயங்கொண்டார்



Teachingninja.in

86. பொருத்துக.

I. பண்புத் தொகை — a. சிவப்பு சட்டை பேசினார்

II. உவமைத் தொகை — b. செங்காந்தள்

III. உம்மைத் தொகை — c. மலர்க்கை

IV. அன்மொழித் தொகை — d. தாய் சேய்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | a | b | c |
| (B) | b | d | a | c |
| (C) | c | b | a | d |
| (D) | b | c | d | a |

87. தமிழ்நாட்டில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ள இடம் ?

(A) சிந்துசமவெளி
(B) உத்திர மேரூர்
(C) கீழடி
(D) ஆதிச்ச நல்லூர்

88. பின்வருவனவற்றுள் குமரகுருபரரால் எழுதப்படாத நூல் எது ?

(A) தந்தர் கலிவெண்பா
(B) தேம்பாவணி
(C) மதுரைக் கலம்பகம்
(D) நீதி நெறி விளக்கம்

89. காலம் கரந்த பெயரெச்சம் __________ ஆகும்.

(A) வேற்றுமைத் தொகை
(B) வினைத் தொகை
(C) பண்புத் தொகை
(D) உவமைத் தொகை

90. வாக்கியம் I : கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கூறியவர் – கம்பர்.

வாக்கியம் II : விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்சியை உவமையாக்கியவர் – இளங்கோவடிகள்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

Teachingninja.in

91. வாக்கியம் I : தமிழகம் வந்து மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர் ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்.

வாக்கியம் II : பெண்களின் உயர்வுக்கு துணை நின்றவர் பண்டித ரமாபாய்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

92. 'மல்லிகை மலர்ந்தது' – என்பது

(A) வேற்றுமைத்தொடர்

(B) வினைமுற்றுத்தொடர்

(C) எழுவாய்த்தொடர்

(D) விளித்தொடர்

93. சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயராகப் பணிபுரிந்தவர்

(A) முத்துலெட்சுமி

(B) கமலா

(C) சத்தியவாணிமுத்து

(D) தமிழரசி

94. "அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் பெருங்கலி வங்கம்" என கப்பலைப் பற்றிக் கூறும் நூல் எது ?

(A) அகநானூறு

(B) புறநானூறு

(C) கலித்தொகை

(D) பதிற்றுப்பத்து

95. எதுகை இடம் பெறாத இணையை எடுத்து எழுதுக

(A) இரவு – இயற்கை

(B) வங்கம் – சங்கம்

(C) அசைவு – இசைவு

(D) உலகு – புலவு

96. திரைப்படப்பாடல் ஆசிரியராகப் புகழ் பெற்றவர்

(A) ஆலங்குடி சோமு

(B) தீபங்குடி ராமு

(C) விருதுப்பட்டி பாரி

(D) சின்னாளப்பட்டி மாரி

97. பின்வருவனவற்றுள் ஒருவர் "எண்பேராயம்" எனும் குழுவைச் சார்ந்தவர் அல்லர்

(A) சாரணர்

(B) கரும விதிகள்

(C) யானை வீரர்

(D) இவுளி மறவர்

98. 'திருவானைக்கா உலா' என்ற நூலின் ஆசிரியர் யார் ?

(A) ஒட்டக்கூத்தார்

(B) கம்பர்

(C) காளமேகப் புலவர்

(D) சேக்கிழார்



Teachingninja.in

99. மழை சடசடவெனப் பெய்தது – இத்தொடரில் அமைந்துள்ளது

(A) அடுக்குத்தொடர்
(B) இரட்டைக்கிளவி
(C) தொழிலாகுபெயர்
(D) பண்பாகு பெயர்

100. 'இளிவரல்' என்பது __________ சுவையினைச் சுட்டுகிறது.

(A) நகை
(B) துன்பம்
(C) இன்பம்
(D) வெகுளி

101. பொருத்துக.

I. தோல் கருவிகள் — a. யாழ், வீணை
II. கஞ்சக் கருவிகள் — b. குழல், சங்கு
III. காற்றுக் கருவிகள் — c. சாலரா, சேகண்டி
IV. நரம்புக் கருவிகள் — d. முழவு, முரசு

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | a | b | c | d |
| (B) | c | b | d | a |
| (C) | b | c | a | d |
| (D) | d | c | b | a |

102. பொருத்துக.

I. நேர் நிரை — a. புளிமா
II. நிரை நேர் — b. கூவிளம்
III. நேர் நேர் — c. கருவிளம்
IV. நிரை நிரை — d. தேமா

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | d | c | a |
| (B) | b | a | d | c |
| (C) | b | a | c | d |
| (D) | b | d | a | c |



Teachingninja.in

103. "மல்லெடுத்த" என்பதின் பொருள்

(A) போர்
(B) தரும்
(C) வலிமைபெற்ற
(D) வயல்

104. பொருத்துக.

I. தனித்தமிழ் இயக்கம் — a. நா. பார்த்த சாரதி
II. குறிஞ்சி மலர் — b. வ. ராமசாமி
III. மழையும் புயலும் — c. இரா. பி. சேதுபிள்ளை
IV. தமிழின்பம் — d. இரா. இளங்குமரனார்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | b | a | c |
| (B) | d | c | a | b |
| (C) | d | b | c | a |
| (D) | d | a | b | c |

105. 'என்னுடன் ஊருக்கு வருவாயா ?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா ?' என்று கூறுவது

(A) ஐய வினா
(B) வினா எதிர் வினாதல் விடை
(C) இனமொழி விடை
(D) ஏவல் விடை

106. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறக் காரணமாக இருந்தவர்

(A) சாவித்திரிபாய் பூலே
(B) பண்டித ரமாபாய்
(C) முத்துலெட்சுமி
(D) மலாலா

107. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடிக்க. "தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்"

(A) மாற்றாரை மாற்றும் படை
(B) கண்டானாம் தான்கண்டவாறு
(C) ஆன்ற பெருமை தரும்
(D) கேளாது நட்டார் செயின்

108. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) காலை மாலை
(B) உள்ளும் புறமும்
(C) விருப்பு வெறுப்பு
(D) வாடி வதங்கி

Teachingninja.in

109. "கொல்லிப்பாவை" என்னும் சிற்றிதழை நடத்தியவர் யார் ?

(A) சுரதா

(B) ஈரோடு தமிழன்பன்

(C) ராஜமார்த்தாண்டன்

(D) வைரமுத்து

110. ஓவியம் வரையப் பயன்படும் துணி

(A) படாம்

(B) சுவர்

(C) குகை

(D) செப்பேடு

111. பொருத்துக.

I. பாக்கு, பாட்டு — a. உயிர்தொடர்க் குற்றியலுகரம்

II. பஞ்சு, பங்கு — b. வன்தொடர்க் குற்றியலுகரம்

III. வரகு, முதுகு — c. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

IV. எஃகு, அஃது — d. மென்தொடர்க் குற்றியலுகரம்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | a | c | b |
| (B) | a | d | c | b |
| (C) | b | d | a | c |
| (D) | c | d | a | b |

112. தேவநேயம் என்ற நூலைத் தொகுத்தவர் யார் ?

(A) இரா. இளங்குமரனார்

(B) பெருஞ்சித்திரனார்

(C) தந்தை பெரியார்

(D) பாரதிதாசன்

113. "பரந்தொருங்கு ஈண்டிய பாடை மாக்களும்" அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

(A) பல்லக்கு தூக்குபவர்

(B) பல இன மக்கள்

(C) பல தொழில் செய்வோர்

(D) பலமொழி பேசும் மக்கள்

Teachingninja.in

114. தவறான இணையை கண்டறிக.

| | |
|---|---|
| I. ஆறு | a. இரு கரைகளுக்கு இடையே ஓடும் நீர்ப்பரப்பு |
| II. கடல் | b. அலைகளைக் கொண்ட உப்பு நீர்ப் பெரும்பரப்பு |
| III. ஊற்று | c. மலையில் இருந்து கீழ்நோக்கி விழும் நீர்நிலை |
| IV. ஏரி | d. வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம் |

(A) ஆறு – இரு கரைகளுக்கு இடையே ஓடும் நீர்ப்பரப்பு

(B) கடல் – அலைகளைக் கொண்ட உப்புநீர்ப் பெரும் பரப்பு

(C) ஊற்று – மலையில் இருந்து கீழ்நோக்கி விழும் நீர்நிலை

(D) ஏரி – வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்

115. வாக்கியம் I : ஆண்பாற் பிள்ளைத்தமிழ் – சிற்றில், சிறுபறை, சிறுதேர்.

வாக்கியம் II : பெண்பாற் பிள்ளைத்தமிழ் – கழங்கு, அம்மானை, ஊசல்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

116. வாக்கியம் I : வல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையில் ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

வாக்கியம் II : கு, சு, டு, து, பு, று – என்பவை குற்றியலுகரச் சொற்கள் ஆகும்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

117. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக

(A) வளையாபதி

(B) யசோதர காவியம்

(C) குண்டலகேசி

(D) மணிமேகலை

118. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது ?

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

Teachingninja.in

119. பொருத்துக.

I. குளிர்ந்த சோலை a. மத்தள ஒலியாய் எழுதல்

II. தாமரை மலர்கள் b. கண்கள் விழித்துப் பார்த்தல்

III. சூழும் மேகங்கள் c. விளக்குகள் போல் தோன்றுதல்

IV. குவளை மலர்கள் d. மயில்கள் ஆடுதல்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | c | d | a |
| (B) | d | c | a | b |
| (C) | d | a | b | c |
| (D) | c | a | d | b |

120. வாக்கியம் I : பூக்காமலே காய்க்கும் மரங்கள் சில உள்ளன எனச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

வாக்கியம் II : விதைகள் பாத்தி அமைத்து விதைத்தால்தான் முளைக்கும் என்கிறது இந்நூல்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

121. மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கும் மெய்யெழுத்துகள் எவை ?

(A) ர், ழ்
(B) ப், ம்
(C) த், ந்
(D) ட், ண்

122. வாக்கியம் I : 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பெருமைப்படுபவர் பாரதியார்.

வாக்கியம் II : கம்பராமாயணத்திற்கு 'இராமவதாரம்' எனப் பெயரிட்டவர் பாரதியார்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

123. வாக்கியம் I : ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிவது வெண்பாவாகும்.

வாக்கியம் II : ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது கலிப்பாவாகும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

Teachingninja.in

124. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது

(A) விளக்கு
(B) கல்வி
(C) விளையாட்டு
(D) பாட்டு

125. "மழையும் புயலும்" என்னும் நூலை இயற்றியவர் யார் ?

(A) வ. ராமசாமி
(B) மு. வரதராசனார்
(C) க. சச்சிதானந்தன்
(D) சு. வெங்கடேசன்

126. 'பனைமரம்' என்பது எதற்கு எடுத்துக்காட்டு ?

(A) உம்மைத் தொகை
(B) வேற்றுமைத் தொகை
(C) வினைத் தொகை
(D) இரு பெயரொட்டுப் பண்புத் தொகை

127. திருஆலவாயிலில் உறையும் இறைவன் யார் ?

(A) முருகப் பெருமான்
(B) முத்துக்குமார சாமி
(C) சிவபெருமான்
(D) பெருமாள்

128. பொருத்துக.

I. ஆரி — a. சிறப்பு
II. ஊழி — b. முறை
III. ஊழ் — c. யுகம்
IV. பீடு — d. அருமை

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | d | a | b | c |
| (C) | d | b | a | c |
| (D) | d | c | a | b |



Teachingninja.in

129. தவறான இணையை கண்டறிக.

| | | |
|---|---|---|
| I. | திருக்குறளின் மூலத்தை அச்சிட்டவர் | a. தஞ்சை ஞானப் பிரகாசர் |
| II. | திருக்குறளுக்கு முதலில் உரை எழுதியவர் | b. மணக்குடவர் |
| III. | திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரம் | c. நட்பு |
| IV. | திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்தவர் | d. ஜி. யு. போப் |

(A) திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்த்தவர் – ஜி. யு. போப்

(B) திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரம் – நட்பு

(C) திருக்குறளின் மூலத்தை அச்சிட்டவர் – தஞ்சை ஞானப் பிரகாசர்

(D) திருக்குறளுக்கு முதலில் உரை எழுதியவர் – மணக்குடவர்

130. மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்ற சொல் எது ?

(A) குற்றியலுகரம்
(B) உயிரள பெடை
(C) அஃகேனம்
(D) உயிர்மெய்

131. தவறான இணையை கண்டறிக.

| | | |
|---|---|---|
| I. | பறந்த | a. பறவை |
| II. | படித்த | b. பையன் |
| III. | வந்த | c. நின்றான் |
| IV. | சென்று | d. பார்த்தான் |

(A) பறந்த – பறவை
(B) படித்த – பையன்
(C) வந்த – நின்றான்
(D) சென்று – பார்த்தான்

132. கனவினும் இன்னாதது எது ?

(A) கயவர் நட்பு

(B) பேதையர் நட்பு

(C) சொல்வேறு செயல்வேறு உள்ளவர் நட்பு

(D) தீயவர் நட்பு

133. "மதுரை பதிற்றுப்பத்தந்தாதி" என்னும் நூலை இயற்றியவர் யார் ?

(A) பாரதியார்
(B) குமரகுருபரர்
(C) பெருஞ்சித்தனார்
(D) பரஞ்சோதி முனிவர்

Teachingninja.in

134. ஒரு பாடலின் அடி, சீர்களில் எவ்வெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடை ?

(A) முதல் எழுத்து
(B) இரண்டாம் எழுத்து
(C) இறுதி எழுத்து
(D) மைய எழுத்து

135. சா.கந்தசாமி எழுதிய எப்புதினத்திற்கு சாகித்திய அகாடெமி விருது கிடைத்துள்ளது ?

(A) சாயாவனம்
(B) விசாரணைக் கமிஷன்
(C) சில நேரங்களில் சில மனிதர்கள்
(D) சுடுமண் சிலைகள்

136. மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் எதைப் போன்றது ?

(A) அகம்பாவம்
(B) மாணிக்கக் கோயில்
(C) அன்பு பாதை
(D) தடம் மறைந்துப் போதல்

137. 'நோன்றல்' என்ற சொல்லின் பொருள் யாது ?

(A) மறவாமை
(B) உறவினர்
(C) வறியவர்
(D) பொறுத்தல்

138. வாக்கியம் I : இந்திர விழா நடைபெற்ற நாட்கள் இருபத்தாறு என மணிமேகலை கூறுகிறது.

வாக்கியம் II : பசியும் பிணியும் பகையும் பெருகவும் மழையும் வளமும் நிறையவும் என முரசறைவோன் வாழ்த்தினான்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

139. நிரை என்ற ஓரசைச்சீரின் வாய்பாடு தருக ?

(A) பிறப்பு
(B) மலர்
(C) காசு
(D) நாள்

140. வாக்கியம் I : மதுரைப்பக்கம் மாட்டுச் சந்தையை "மாட்டுத் தாவணி" என்று சொல்வார்கள்.

வாக்கியம் II : கிராமச் சந்தையில் ஆண்கள் மட்டுமே வந்து விற்பனை செய்வார்கள்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு



Teachingninja.in

141. குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தவர்

(A) பக்தவச்சலம் (B) எம். ஜி. ராமச்சந்திரன்

(C) ஜெ. ஜெயலலிதா (D) கு. காமராசர்

142. சாந்த குணம் உடையவர்கள் ________ முழுவதையும் பெறுவர்.

(A) புத்தகம் (B) செல்வம் (C) உலகம் (D) துன்பம்

143. ஜெயகாந்தன் எழுதாத புதினம் எது ?

(A) சுந்தரகாண்டம் (B) கங்கை எங்கே போகிறாள்

(C) இன்னும் ஒரு பெண்ணின் கதை (D) சேற்றில் மனிதர்கள்

144. பொருத்துக.

| | |
|---|---|
| I. அடிசில் | a. மணம் |
| II. வெறி | b. சோறு |
| III. மடிவு | c. பலாப்பழம் |
| IV. வருக்கை | d. சோம்பல் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | a | c | d |
| (B) | b | a | d | c |
| (C) | a | d | c | b |
| (D) | d | c | b | a |

145. பொருத்துக.

| | |
|---|---|
| I. ஆசியாவின் மிகப் பழமையான நூலகம் | a. கொல்கத்தா தேசிய நூலகம் |
| II. இந்தியாவின் முதல் பொது நூலகம் | b. லைப்ரரி ஆப் காங்கிரஸ் |
| III. இந்தியாவின் மிகப் பெரிய நூலகம் | c. சரஸ்வதி மகால் |
| IV. உலகின் மிகப்பெரிய நூலகம் | d. திருவனந்தபுரம் நடுவண் நூலகம் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | d | a | b |
| (B) | b | c | d | a |
| (C) | c | d | b | a |
| (D) | d | a | b | c |

Teachingninja.in

Teachingninja.in

146. வாக்கியம் I : 'உம்' எனும் இனச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

வாக்கியம் II : 'மட்டும்' எனும் இடைச்சொல் வரையறைப் பொருள் தருகிறது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

147. வாக்கியம் I : பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூலாக புறநானூறு விளங்குகிறது.

வாக்கியம் II : "யாண்டு" என்பது 'எனது' என்னும் பொருளில் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடப்படுகிறது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

148. சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாள் ____________ நாளாகக் கொண்டாடப்படுகிறது.

(A) தேசிய கல்வி நாள்
(B) தேசிய உரிமை நாள்
(C) தேசிய மருத்துவர் நாள்
(D) தேசிய நூலக நாள்

149. உவமை, உவமேயம் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறும் அணி எது ?

(A) உவமை
(B) உருவகம்
(C) தீவகம்
(D) நிரல்நிறை

150. "சமயக் கணக்கர்" என்பவர் யார் ?

(A) சமயத்தத்துவ வாதிகள்
(B) நேரத்தைக் கணக்கிடுவோர்
(C) சமையல் செய்பவர்
(D) தூதர்

Teachingninja.in